**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 70/2024**
**Examination of - PW1**

**Name** : இந்திராணி

Husban’s Name : **கிருஷ்ணமூர்த்தி**

**Village** : வட்ராபுதூர்

**Taluk** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 08.07.2025.**

**முதல்விசாரணை**

நான் தற்போது வட்ராபுதூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதி ராமமூர்த்திக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரங்களை பெறுவதற்காக எனது தரப்பு ஆவணங்களாக 19.12.2023 தேதியிட்ட பாக பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 19.12.2023ம் தேதி எனது மாமனார் இராஜமாணிக்கம் அவர்களுக்கு வழங்கப்பட்ட கணிணி வழி பட்டா தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 17.12.2020ம் தேதி எனது மகன் மைனர் கௌத்தம் அவர்களுக்கு எனது மாமனார் இராஜமாணிக்கம் தாவா சொத்துககளை கிரையம் செய்தார் அந்த கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 11.01.2023ம் தேதியில் எனது மகன் கௌத்தம் அவர்களின் பெயரிலும் மற்றும் எனது பெரியமாமனார் மகன் கண்ணன் அவர்களின் பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்ட கணிணி கூட்டுப்பட்டா தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 11.05.2022ம் தேதி திருவண்ணாமலை தாசில்தார் அவர்கள் வழங்கிய சிட்டா தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும். கடந்த 11.05.2022ம் தேதி திருவண்ணாமலை தாசில்தார் அவர்கள் வழங்கிய அ-பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 11.05.2022ம் தேதி திருவண்ணாமலை தாசில்தார் அவர்கள் வழங்கிய பழைய புலபட நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7** ஆகும். கடந்த 11.01.2021ம் தேதி திருவண்ணாமலை தாசில்தார் அவர்கள் வழங்கிய அடங்கல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8** ஆகும்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்